தச்சூர் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு.து.வடிவேலு

ந.க. 12.4.2023 நாள் 11.04.2023

பொருள் மனைப்பிரிவு திருவண்ணாமலை மாவட்டம் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம்- தச்சூர் ஊராட்சி தச்சூர் கிராமம் சர்வே எண்கள் 127/7,129/1கே,129/1எல்,129/1ஓ,129/2ஏ,129/2பி 129/2சி, 139/1 ஆகியவற்றில் ஏக்கர் 9.17 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு மனைப்பிரிவுக்கு திருவண்ணாமலை நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களால் ஒப்புதல் வழங்கப்பட்டது. ஊராட்சி மன்றம் தீர்மானம் இயற்றி இறுதி ஒப்புதல் வழங்குதல் சார்பாக.

பார்வை 1) திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் ROC NO.TUOJKGPP/2022TVM /2022 TCP தி.மலை நாள் 16.11.2022

2) மனுதாரர் திரு.T.கதிர்ராஜ் த/பெ தியாகராஜன் அசோக்நகர் சென்னை அவர்களின் கடிதம் நாள் 05.01.2023

3) தச்சூர் ஊராட்சி மன்ற தீர்மான எண் 06/2022-2023 நாள் 11.04.2023

****

உத்தரவு

பார்வை 1ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் திருவண்ணாமலை அவர்களின் கடிதத்தில் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், தச்சூர் ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண்கள் 127/7,129/1கே,129/1எல்,129/1ஓ,129/2ஏ,129/2பி,129/2சி, 139/1 ஆகியவற்றில் ஏக்கர் 9.17 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள குடியிருப்பு 237 மனைகளுக்கு ம.வ/மா.ந.ஊ.உ.இ(தி.மலை) எண் 249/2022 ன்படிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 2ல் காணும் கடிதத்தில் சென்னை அசோக்நகர் எண் 18/17 சாமியார் கார்டன் தெரு 2பி 2வது மாடி KVS வில்லா சார்ந்த T.கதிர்ராஜ் த/பெ தியாகராஜன் என்பவர் தச்சூர் ஊராட்சிக்குட்பட்ட சர்வே எண்கள் 127/7,129/1கே,129/1எல்,129/1ஓ,129/2ஏ,129/2பி,129/2சி, 139/1 ஆகியவற்றில் ஏக்கர் 9.17 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள 237 மனைகளுக்கு ஊராட்சி மன்ற இறுதி ஒப்புதல் அளிக்க கோரியுள்ளார்.

திட்டமில்லாத பகுதி 1 திட்டப்பகுதியில் அமையும் மனைப்பிரிவுகளுக்கான கூராய்வு கட்டணமான ரூபாய் 1000/- மற்றும் இடத்தின் சந்தை மதிப்பில் 3 % தொகையை நிலப்பயன் மாற்றக் கட்டணமாக ரூபாய் 31252/- மட்டும் தச்சூர் கிராம ஊராட்சி தச்சூர் பாரத ஸ்டேட் வங்கி ,தச்சூர் A/C NO 11438377785 நாள் 20.01.2023 அரசு தலைப்பில் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் மற்றும் நீர்த்தேக்க தொட்டி கட்டும் இடம் மற்றும் மின்சார வாரியத்திற்கு ஒதுக்கிய இடத்திற்கு பத்திர பதிவு எண் 10281/2022 நாள் 31.10.2022 ன்படி ஒப்படைக்கப்பட்டது.

து. வடிவேலு

PRESIDENT
Thatchur Panchayat
West Arni Panchayat Union
Thiruvannamalai District.

எனவே சர்வே எண்கள் 127/7,129/1கே,129/1எல்,129/1ஓ,129/2ஏ,129/2பி,129/2சி, 139/1 ஆகியவற்றில் ஏக்கர் 9.17 சென்ட் பரப்பளவில் அமைந்துள்ள 237 மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்க பார்வை 3ல் கண்டவாறு தச்சூர் கிராம ஊராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் மேற்படி மனைகளுக்கு கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு கிராம ஊராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்

(1) வரைபடத்தில் உள்ளவாறு வீட்டுமனைகள் 1 முதல் 237 வரை அங்கீகரிக்கப்படுகிறது.

(2) கூடுதல் மனைகள்(உட்பிரிவு) செய்ய வேண்டியிருப்பின் அல்லது வரைபடத்தில் மாறுதல் வேண்டியிருப்பின் ஊராட்சியின் அனுமதியுடன் மாறுதல் செய்யப்படவேண்டும்.

(3) ஊராட்சியின் அனுமதி இல்லாமல் வரைபடத்தை திருத்தவோ மாற்றியமைக்கவோ கூடாது.

(4) வரைபடத்தில் மாறுதல் செய்ய வேண்டி இருப்பின் அதற்குரிய கட்டணத்தை செலுத்தி வரைபடத்தை மாற்றுதல் செய்து கொள்ள வேண்டும்.

(5) வீட்டு மனைகள் ஒதுக்குவதிலோ அல்லது மனையின் அளவுகள் குறித்த பிரச்சனைகள் ஏதேனும் வரும் பட்சத்தில் பிரச்சனைகளை தாங்களே முன்னின்று தீர்வு காண வேண்டும்.

(6) வீட்டுமனைகள் பற்றிய இதர ஆவணங்களையும் நிலமனைப்பிரிவு வரைப்படத்தையும் நிர்வாக அலுவலர் மற்றும் தலைவர் கேட்கும்போது காண்பிக்கப்படவேண்டும்.

(7) பத்திரத்தில் பதிவு செய்துள்ள இடத்திற்கு மட்டுமே வீட்டுமனைகள் அங்கீகரிக்கப்படும்.

தலைவர்
தச்சூர் ஊராட்சி,
மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம்

பெறுநர்

திரு.T.கதிர்ராஜ் த/பெ தியாகராஜன்
எண் 2பி 2வது மாடி KVS வில்லா, 18/17 சாமியார் கார்டன் தெரு
அசோக் நகர் சென்னை 600083

நகல் ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் (ஊராட்சிகள்) செய்யாறு கோட்டம்
நகல் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) ஒன்றியம் மேற்கு ஆரணி
நகல் அ3 இருப்பு கோப்பிற்கு
நகல் சார்பதிவாளர் ஆரணி